# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed Journal Multidisciplinary)

ISSN: 2582-399X



காலாண்டு இதழ்

(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)

ஆகிய மாதங்களில் வெளிவரும்

Vol:7 Issue :28 October 2025

கோட்டை:7 வாயில்:28 அக்டோபர் 2025

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India
selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University) Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

**Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan**

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,
Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of
Tamil, Institute of Languages, Literature& culture,
Visva – Bharathi University,Santiniketan,West
Bengal, India -731235

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of
Aesthetic Stidies ,Eastern University, Srilanka

# அரண்

# Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

*International e Journal of Tamil Research*



## EDITORIAL BOARD

**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet,
Chennai - 600 021.

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

**நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்**

**இதழாக்கம்**

**திரு ப. ஜெயகிருஷ்ணன்**

**முதன்மை ஆசிரியர்**

**முனைவர் பிரியாகிருஷ்ணன்**

***+917299587879***

www.aranejournal.com

aranjournal@gmail.com


அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# அகத்தினுள்


**ஐங்குறுநூறு 'சிறுவெண் காக்கைப் பத்து' பாடல்களில் எடுத்துரைப்புச் சிறப்புகள் மற்றும் நுட்பங்கள்**
**முனைவர் நா.ஜானகிராமன்1, முனைவர் பெ.தனலட்சுமி2**

**குறுந்தொகையை தழுவிய இக்கால படைப்புகளில் இலக்கியநயம்**
**மெ.பேபி நிஷாந்தினி**

**பட்டினப்பாலையில் பழந்தமிழரின் கடற்பயணத்தில் மரக்கலங்கள்**
**ப.ராம்குமார்**

**புறநானூற்றில் உயிரியல் செய்திகள்**
**எம்ஜிராமச்சந்திரன். வெ**

**புறநானூற்றில் தமிழர் பண்பாடு**
**திருமதி கா.சுகன்யா,**

**செவ்வியல் இலக்கியங்களில் இல்லறத்தில் தாயின் பங்களிப்பு**
**இரா.சினேகலதா**

**திருக்குறளில் உழவும் உண்மைநிலையும்**
**முனைவர் இரா.ஜெய்சங்கர்**

**திருக்குறளில் மருத்துவச் செய்திகள்**
**முனைவர் சல்மா மஹஜபீன் த. மு**

**திருக்குற்றாலக் குறவஞ்சியில் குறத்தியின் குறிசொல்லும் பான்மை**
**க.நித்தியா**

**அபிராமி அந்தாதி - ஒரு பார்வை**
**சா.கஸ்தூரி**

**வேட்டுவர்களின் பண்பாட்டு சார்ந்த மரபுகள் — சிலப்பதிகாரம்**
**முனைவர் த. சுபஜா**

**வைணவ உரைச் சக்ரவர்த்தி பெரியவாச்சான் பிள்ளை**
**முனைவர்ப.தனஞ்செயன்**

**தெய்வங்களும் கோவில்களும்**
**அ.அறிவுக்கொடி**

**பெரும்பண்ணையூர், சிமிழி, புதுக்குடி கிராம மக்களின் சிறுதெய்வ வழிபாட்டில் மக்கட்பேறு சடங்குப் பின்புலம்**
**க.கார்த்திகா**



**அட்டைப்படம் உதவி**
**இணையம்**

**நன்றி**

# அகத்தினுள்

பாம்பாட்டிச் சித்தர் பாடல்களில் சமுதாயச் சிந்தனைகள்
முனைவர். க.விமலா

திருக்குர்ஆன் கூறும் மாந்தர் ஒழுக்கங்கள்
அ.ஷமீலா பேகம்

ஜோ டி குரூஸின் யாத்திரை புதினத்தில் சிறுவனின் தேடல்கள்: கத்தோலிக்கம் மற்றும் பூர்வீக நம்பிக்கைகளின் புரிதல்கள்
முனைவர் தா. இரா.ஹெப்சிபா பியூலா சுகந்தி

கூகை புதினத்தில் கையாளப்பட்டுள்ள உத்தி முறைகள்
இரா.ராஜேஷ் குமார்

எஸ்.இராமகிருஷ்ணனின் மூன்று அற்புதங்கள் சிறுகதையில் தெக்கனின் பாத்திரப்படைப்பு
ஜெ.சர்மிளா

தோட்டியின் மகன் நாவலில் மக்களின் உணர்வுகளும் போராட்டங்களும் முனைவர் வ.மீனாட்சி

கூளமாதாரி புதினத்தில் தலித்தியம்
வீ. சவிதா

வௌவால் தேசத்தில் இயற்கை சூழல்
மு.ஹரிதேவி

சோ. தர்மனின் சூல் நாவலில் பழமொழிகள்
மு.கோமதி

சோ. தர்மனின் 'சூல்' நாவலில் உவமைகள்
இ.ராபர்ட் கென்னடி

மலையகத்தமிழரும் அகதி வாழ்வும்
வேளாங்கன்னி.ஏ

அண்மைய நாவல்களில் மீனவர்களின் பண்பாட்டியல்
முனைவர் ந. இரத்தினக்குமார்

கே.பி கறுப்பனின் பெண்ணியச் சிந்தைனகள்
தனிஜா த. பெ

அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்


**பொதிகைமலையின் ஆயண்டிரன்**
**முனைவர் த. முத்துலட்சுமி**

**பாண்டிய நாட்டுத் துறைமுகங்கள்**
**கி.தமிழரசி**

**பழந்தமிழர்களின் வாழ்வியலில் மலர்ப் பயன்பாடு ஒரு பார்வை**
**முதுமுனைவர் பிரியாகிருஷ்ணன்**

**வாய்மொழிப் பாடல்களில் பஞ்சகாலக் குறிப்புகள்**
**ம.கலைச்செல்வன்**

**இலக்கியங்களும் பசிப்பிணியும்**
**முனைவர் ப. மணிகண்டன்**

**அறிவியல் நுட்பங்களும் இலக்கிய செழுமையும்**
**முனைவர் அ.புஷ்பா**

**கணினித்தமிழ் வளர்ச்சியில் இணைய நூலகங்கள்**
**கு.நிவேதா**

**மொழி வளர்ச்சியில் ஊடகத்தின் பங்கு**
**முனைவர் ஈ இசக்கியம்மாள்**

*1.The Predicament of Women in Patriarchal Society in Anita Nair's The Better Man*
**K. Nesapriya**

**திரைப்படக் கதைசொல்லலும் சமூகத் தாக்கமும்: அசுரன் திரைப்படம்.**
**(திரைப்படக் கோட்பாடுகள், தொழில்நுட்ப அழகியல் மற்றும் பார்வையாளர் வரவேற்பு)**
**திரு. விசுமாப்போடி சசிகரன்**

**பாலக்காடு மாவட்டத்தில் சுமை தாங்கி**
**முனைவர் வே.இரவி**

**கீழடி அகழாய்வு - தமிழரின் தொன்மையான வரலாற்று பின்புலம்**
**முனைவர் அ. மதலேன்**

**சம்புவராயர் கல்வெட்டுகளில் அறியலாகும் நாடும் ஊரும்**
**முனைவர்அ. அமுல்ராஜ்**

**பரதநாட்டியத்தில் நால்வகை விருத்தியின் வகிபங்கு**
**கலாநிதி தாக்ஷாயினி பரமதேவன்**



**அட்டைப்படம் உதவி**
**இணையம்**

**நன்றி**

# தமிழ்

# *Cultural Traditions of the Vettuvars - Silappadhikaram*

***Dr T. Subhaja,*** *Assistant Professor, Patrician College of Arts and Science, Adiyar, Chennai- 20*

***Abstract***

*The long-standing history of Tamil society is preserved through a variety of documents produced across different periods. Among these, literary works, grammatical treatises, folk literature, copper plates, and inscriptions are particularly significant sources. Such records are not confined to a single community; rather, they comprehensively document the culture and history of all sections of Tamil people. The epic Silappathikaram, narrated in a poetic and narrative style, highlights the cultural practices, modes of living, musical and theatrical traditions, festivals, worship practices, and systems of governance—from the earliest clans of the Tamils to their development into a flourishing mercantile society.*

***Keywords:*** *vettuvar, silapathikaaram, kannagi, kovlan, forest*

# வேட்டுவர்களின் பண்பாட்டு சார்ந்த மரபுகள் - சிலப்பதிகாரம்

**முனைவர் த. சுபஜா,** உதவிப் பேராசிரியர், பாட்ரிசியன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,

அடையாறு , சென்னை - 20

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழ்ச் சமூகத்தின் நீண்டகால வரவாற்றைக் குறிப்பிடும் பல்வேறு தரவுகள் காலந்தோறும் வெவ்வேறு வகையான ஆவணங்கள் வழியாகக் கிடைக்கின்றன. அவ்வாறு கிடைப்பனவற்றுள் இலக்கியங்கள், இலக்கணங்கள், நாட்டுப்புற இலக்கியங்கள், செப்பேடுகள், கல்வெட்டுகள் முதலானவை குறிப்பிடத்தக்க ஆவணங்களாகும். இந்த ஆவணங்கள் ஒரு பிரிவினர் என்றில்லாமல் தமிழரின் பண்பாடு மற்றும் அடையாளத்தைக் கட்டமைக்கும் முயற்சியில் பன்முகத்தன்மையைப் பிரதிபலிப்பதாகக் காணப்படுகின்றன. காப்பியத் தன்மையோடு கதைகளாகச் சொல்லப்பட்ட சிலப்பதிகாரம் தமிழர்களின் தொல்குடி முதல் முன்னேறிய வணிகச் சமூகம் வரையுள்ள மக்களின் பண்பாட்டு முறைகள், வாழ்வியல் நெறிகள், இசைக்கூத்துமரபுகள், விழாக்கள், வழிபாட்டு முறைகள், அரசுமுறை எனப் பல வாழ்வியல்

முறைகளை எடுத்தியம்புகிறது. அந்த வகையில் சிலப்பதிகாரம் வெளிப்படுத்துகின்ற தகவல்கள் ஆராய்ச்சிக்கு வலிமையான ஆதாரங்களாக அமைகின்றன.

**திறவுசொற்கள்:** வேட்டுவர், சிலப்பதிகார்ம், கண்ணகி, கோவலன், காடு

**முன்னுரை**

பழந்தமிழர்களின் வாழ்க்கை முறையானது தங்களது வாழ்வியல் சூழலுக்கு ஏற்ப குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐம்பிரிவுகளாக பகுக்கப்பட்டு ஒரு வரையறைக்குட்பட்ட வாழ்க்கை முறையைக் கொண்டு, அங்கு பண்பாடுகள் தோற்றம் பெற்று போற்றிப் பாதுகாக்கப்பட்டன. மனித சமுதாயம் இப்படியான வளர்ச்சி நிலையே அடைவதற்கு முன் அனைத்து மக்களுமே ஒரு காலகட்டத்தில் வேடர்களாக இருந்து வளர்ச்சி நிலையை அடைந்தவர்கள். காடுகளில் வேட்டையாடி புசிக்க தொடங்கிய மனிதன், அடுத்த படி நிலையாக ஆற்றின் கரைகளில் குடில்கள் அமைத்து விவசாயம் செய்யவும் இல்லங்களில் செல்லப்பிராணிகளை வளர்க்கவும் தொடங்கினான். அதன் பின்னரே கிராமங்களாக தோற்றம் பெற்று மக்களின் எண்ணிக்கை அதிகரித்து நாடுகளாக மாற்றம் பெற்றன. இதுவே, மனிதனின் வளர்ச்சி நிலையாக வரலாறு காட்டுகிறது.

தமிழில் தோன்றிய முதல் காப்பியமான சிலப்பதிகாரம் ஒரு மாறுதல் நிலையைக் உணர்த்தும் காப்பியமாகும். அதாவது இனக்குழு வாழ்க்கை பின்னுக்கு தள்ளப்பட்டு, வணிகக்குடிகள் மேன்மை அடையும் காலகட்டத்தைக் குறிக்கின்றது. இவ்வாறு சிலப்பதிகாரம் ஒன்றுக்கொன்று மாறுபட்ட சமுதாய வாழ்வியலை காட்டுவனவாய் அமைந்துள்ளது. வேட்டுவ வரியில் பாலை நில மக்களின் வாழ்வியல் நிலைகளைப் பதிவுச்செய்கிறது. அந்த நிலையில் வேட்டுவர் குறித்து ஆராய்வது நோக்கமாக அமைந்துள்ளது.

**வேடர்கள் — சொல் விளக்கம்**

'வேட்டுவன்' எனும் சொல் 'வேட்டை' எனும் வினையடியைக் கொண்ட சொல்லாகும். வினை என்பது தொழிலைக் குறித்து வரும் என்பதால் 'வேட்டை' என்பது வேட்டையாடும் தொழிலைக் குறிக்கின்றது. இதனால் வேட்டுவன் என்பது 'வேட்டையாடும் தொழிலைச் செய்பவன்' என்னும் பொருளையைக் குறிக்கின்றது. பழந்தமிழகத்தில் குறிஞ்சி நிலம் என்பது மலையைச் சார்ந்தது. மலைக்கும் வேட்டுவர்களுக்குமான தொடர்பை பல இலக்கியங்களில் காண முடிகிறது. தூத்துக்குடி மாவட்டத்தில் கழுகுமலையில் 'வேட்டுவன் கோவில்' வரலாற்று ஆவணமாக இருந்து வருகிறது. இன்றும் வேட்டுவர்களின் அடையாளமானது இலையும் குழையும் அம்பும் வில்லும் கொண்ட மனித உருவமாகவே பார்க்கப்பட்டு வருகிறது. வேடர்கள்

சாதாரண வாழ்க்கைக்கு உட்படாதவர்களாக காணப்பட்டாலும் அண்மை காலமாக நடைமுறை வாழ்க்கை முறைக்கு தம்மை மாற்றிக்கொண்டு வாழும் நிலையும் பார்க்க முடிகிறது.

**சிலப்பதிகாரத்திற்கு முன்**

''ஆயர் வேட்டுவர் ஆடு உத் திணைப்பெயர்

ஆவயின் வரூஉம் கிழவரும் உளரே'' (தொல். அகப். 967)

என்ற நூற்பாவில் ஆயர், வேட்டுவர் (குறிஞ்சி நில மக்கள் பெயர்) என்ற இன மக்களும் இவை போன்ற பிற இன மக்களும் தொல்காப்பியர் காலத்தில் வாழ்ந்தனர் என்பதை உறுதி செய்கின்றன. தொல்காப்பியர் காலத்தைத் தொடர்ந்து சங்க காலத்திலும் ஆயர், வேட்டுவர் குறவர் போன்ற பல இன மக்கள் வாழ்ந்தனர் என்பதற்கு இலக்கியங்களில் சான்றுகள் உள்ளன.

குன்றக் குறவன் ஆர்ப்பின் எழிலி

நுண்பல் அழிதுளி பொழியுநாட" (ஐங் - 251)

குறுநெறிக் கொண்ட கூந்தல் ஆய்மகள்

நெய்விலைக் கட்டிப் பசும் பொன் கொள்ளாள் "(பெரு. பா: 162 - 163)

இவ்வாறு, தொல்காப்பியத்திலும் இலக்கியங்களிலும் வேட்டுவர்கள் குறித்த செய்திகள் உள்ளன. சங்க இலக்கியங்களில் வேட்டுவர்கள் என அழைக்கப்பட்டவர்கள் கல்வெட்டுகளில் பூலுவர் என்றும் காவலன் என்றும் வேட்டுவர் என்றும் மாவலியர் என்றும் வேனர் அல்லது வேட்டைக்காரன் என்றும் அழைக்கப்பட்டனர்.

**சிலப்பதிகாரத்தில் இனவரைவியல்**

இனக்குழுச் சமுதாயத்தின் அழிவுநிலை குறித்து பேராசிரியர் கா. சுப்பிரமணியன் கூறுகையில் உணவு சேகரித்தலும் வேட்டையாடுதலும் முதலில் உலகெங்கும் நிலவிற்று, ஆனால் அதைத் தொடர்ந்த மாறுதல்கள் அந்தந்தச் சூழ்நிலையைப் பொறுத்தாயிற்று. சில இடங்களில் கால்நடைப் பொருளாதாரத்திற்கும் விவசாயப் பொருளாதாரத்திற்கும் மாறினர். இவற்றின் முன்னேற்றம் இனக்குழு முறை சிதைய வழி செய்தன. அவர் கருத்தின் அடிப்படையில் படிபடியாக கிராமம் வளர்ச்சி அடையும் போது பழைய வாழ்க்கை, பண்பாடு நிலையிலும் மாற்றம் காணமுடிகிறது.

இனவரைவியல் என்னும் பெயர் வழக்கத்தில் தொடங்கப்படாத காலகட்டத்திலேயே இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் இனவரைவியல் கூறுகள் முழுவதுமே பதிவுச் செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. வேட்டுவர் வரியில் வேடர்களின் சமூகம் சார்ந்தும் அவர் தம்

பண்பாடு, சடங்கார்ந்த விடயங்கள், போர் நெறிகளையும் வீர பண்புகளையும் வேட்டுவர்களின் போர் தெய்வமான கொற்றவை வழிபாடு மற்றும் மரபு சார்ந்து பல ஆதாரங்கள் அறியக்கிடைக்கின்றது. சிலப்பதிகாரத்தில் வேட்டுவ வரியில் மறம், மறவர், எயினர், கொங்கர், கானவர், தொல்குடி, வேடர் என்ற பெயரில் அழைக்கப்படுகிறது

**குடியிருப்பு**

ஆரம்பகாலத்தில் வேடர்களின் வாழ்க்கை சாதாரண மக்களின் வாழ்க்கை முறையினின்று வேறுபட்டதாக இருந்தது. மிருகங்களை வேட்டையாடுதல், காட்டில் தேன் எடுத்தல் போன்றவை இவர்களின் முக்கிய உணவாக இருந்தது. அதகேற்ப, இயற்கையாக அமையபெற்ற குகைகள், பாறை இடுக்குகள், புதர்கள் போன்றவற்றைப் புகலிடங்களாக கொண்டனர்.

கடுங்கதிர்வேனில் (13; 3) கடுங்கதிர்திருகலின் (12; 1)

என வெயிலின் வெம்மையும் கொடுமையும் சிலப்பதிகாரத்தில் வருணிக்கப்பட்டுள்ளன.

மழை வளம் இல்லாத பாலை நிலத்தில், வெயிலின் கடும் கதிர்களால் கொடிய வெம்மை உடையதாய் இருந்தன. முள்வேலிகள் சூழ்ந்து காவல் செய்யப்பட்ட மன்றங்களில் வேடர்கள் கூட்டமாய் வாழ்ந்திருந்தனர். இச்செய்தியே,

"இடுமுள் வேலி எயினர் கூட்டுண்ணும்
நடுவூர் மன்றத் தடிபெயர்ந்தாடிக்
வல்வில் எயினர் மன்றுபாழ் பட்டன
மறக்குடி தாயத்து வழிவளம் சுரவாது
அறக்குடி போல அவிந்தடங்கினர் எயினரும் " (சி.வே.வ, 10 - 15)

என்ற அடியின் வழி வேடர்களும் கூடி வாழும் கூட்டுணர்ச்சியும் வேட்டையின் போது கிடைத்த உணவை ஒருவருக்கொருவர் பங்கிட்டு உண்ணும் தன்மையும் அறிய முடிகிறது. பங்கிட்டு உண்பதற்காகவே குடியிருப்புகளை அருகருகில் அமைத்துக்கொண்டனர் என்றும் எண்ணத் தோன்றுகிறது. வேட்டை உணர்வு அவர்களை வலிமை உடையவர்களாக வைத்திருக்கும் தன்மையின் அடிப்படையில் மறக்குடி, ஆறக்குடி என்று இளங்கோவடிகள் பயன்படுத்திய சொல்லாட்சியில் புரிந்துகொள்ள முடிகின்றது.

**வேடர்நிலமும் தொழிலும்**

வேட்டையாடுவது வேடர்களின் முதன்மைத் தொழில். குறிஞ்சி நில மக்கள் வில்லையும் அம்பையும் கொண்டு வேட்டையாடினார்கள். வேட்டைக்கு மட்டுமன்றி போர் செய்வதற்கும் அம்பு பயன்படுத்தப்பட்டது. சங்க இலக்கியங்களில் அம்புக்கு ஏ, ஏஎ, அம்பு, கணை, கோல் போன்ற பெயர்கள் வழங்கப்பட்டு வந்தன. கடையெழு வள்ளல்களில் ஒருவரான வல்வில் ஓரியின் வில் தொழிலின் பெருமை புறநானூற்றில் (152) பேசப்பட்டுள்ளது. வேடர்களுக்கு உரிய பயிற்ச்சியை ஒரு அரசனே கற்றிருந்தான் என்பதை இலக்கியங்களின் வழி பார்க்கும்போது வேட்டுவத் தொழின் மேன்மை தெரியவருகிறது. அரசனுக்கு ஒப்ப மதிக்கப்பட்டதை புறநானூறு (189) பாடல் ஒன்றிலும் பார்க்கலாம். அரசரையும் வேட்டுவரையும் ஒத்த நிலையில் காணுகின்ற புலவரின் பண்பு போற்றத்தக்கது ஆகும். என்றாலும் இக்கருத்தின் அடிப்படையில் பார்க்கும் போது, தமிழ் சமூக மரபில் ஒரு குழு தங்களின் சுயதேவைக்காகத் தங்களுக்குள் மற்றொரு பிரிவினரை உருவாக்கி அவர்களை அனைத்து நிலைகளிலும் அடிமைப்படுத்தி வந்துள்ளனர். இவ்வாறு நிகழ்ந்த அடிமைப்படுத்துதலில் முதன்மைக் காரணியாகத் தொழில் முறையானது கொள்ளப்பட்டது. இப்படி உருவாக்கப்பட்ட இம்மக்களில் (மறவர், வேட்டுவர், இடையர், உமணர்) ஒரு பிரிவினர் அரசியல், சமூகம், பொருளாதாரம் என அனைத்து நிலைகளிலும் புறக்கணிக்கப்பட்டுக் கீழ்நிலை மக்களாக்கப்பட்டனர்.

மழைவளம் இல்லாத பாலை வெம்மையில் வாழும் வேடர்கள், வில்லைக் கலப்பையாகப் பயன்படுத்தி உணவை உண்டு பண்ணினர். கானவர்களின் தொழிலுக்கு வில் முதன்மை கருவி, விற் தொழில் வேடர் என்றெல்லாம் அழைக்கப்பெற்றமை வில்லேந்தி விலங்கை வேட்டையாடியும் தேனெடுப்பதும் வழக்கமாக கொண்டிருந்தான்.

"மறங்கொல் வயப்புலி வாய்பிளந்து" (வே.வரி .கொற் - 7)

"ஆறெறி பறை" (வே.வ. கொற். கோ.20)

"இட்டுத்தலை எண்ணும்" (வே.வ. கொற். கோ. |)

என்ற வரிகளின் வழி மறவர்களின் வேட்டையும் வீரமும் பதிவுச் செய்யப் பெற்றுள்ளது.

எயினரது இனக்குழு வாழ்கையில் சுவராடல் என்ற தொழில் முக்கியமான இடத்தைப் பெறுகின்றது. இவர்கள் கூட்டமாகச் சென்று ஆநிரைகளைக் கவர்ந்து வந்துள்ளனர். இதனை,

தலைநாளை வேட்டத்துத் தந்தநல் ஆனிரைகள்''

கரந்தை அலறக் கவர்ந்த இனநிரைகள்''

அயலூர் அலற எறிந்தநல் ஆனிரைகள்''

என்ற அடிகளில் காணலாம்.

வேட்டுவக்குலப் பெண்களுக்கென தனியாக தொழில் இருந்த தாக குறிப்புகள் ஏதுமில்லை. வேட்டுவ வரியில் கள்விலையாட்டி (12- 16) என்ற சொல் மூலம் பொண்கள் கள்விற்கும் தொழிலில் ஈடுபட்டுள்ளனர் என்பதை அறியமுடிகிறது.

**கூட்டுழைப்பும் கூட்டுண்ணுதலும்**

வேட்டுவர்கள் வேட்டையாடி கிடைத்தவற்றை உணவாக்கிக் கொண்டனர். அதன் தொடர்ச்சி இந்நாளில் பிரியாணி என்னும் உணவு, அந்நாளில் புலால் உணவு, ஊனை சோறுடன் கலந்து உண்பது, அவரை, துவரை முதலியவற்றையும் அதாவது நம்மிடையே பரவலாக இருக்கும் அவியலையும் இவர்கள் விரும்பி உண்டனர் என்றே கூறலாம்.

"புழுக்கலும். நோலையும் விழுக்குடை மடையும்" ( கொ. கோல. 18)

வேட்டுவ குல ஆண்கள் கள்ளை விரும்பி உண்டனர். வேட்டுவர் குலப் பெண்கள் கள்ளை எடுத்து தெருக்களில் விற்பனைச் செய்த செய்தியும் உள்ளது. தெருக்களில் விற்பனைச் செய்யும் வேடர்கள் குலப் பெண்களை கள்விலையாட்டி என்று அழைத்தனர். இதனை,

"கள்விலை யாட்டி மறுப்

பொறா மறவன் கைவில் ஏந்திப்" (வே. வ. வெட்சிப்புறநடை. 1)

"கள்வி லை யாட்டி நல் வேய்தெரி கானவன்" (வே.வ. கொடை .7)

"மட்டு உண் வாழ்க்கை வேண்டுதிர் ஆயின்" (வே.வ .கொ.18)

இனக்குழு வாழ்க்கையில் சுவராடல் முக்கியமான தொழிலாக இருந்தாலும் கவர்ந்த ஆனிரைகளை கொல்லன், துடியன், பாணன், ஒற்றன், நிமித்திகள், முதிர்ந்த எயினர், எயிற்றியர் உள்ளிட்டோருக்கு கவர்ந்த பொருட்கள் பகிர்ந்து வழங்கினர். எனவே தனிநபர் பாதுகாப்பதுமில்லை. தமக்குத் தேவை என சேர்த்து வைப்பதும் இல்லாத ஒரு அரிதான அறசெயல் அவர்களிடையே இருந்தது. மனிதனின் ஆரம்ப வாழ்வே கூடி இருத்தல், கூடி வேட்டையாடும் போக்கும் பகிர்ந்து உண்டலும் ஆகும். உதாரணமாக தொல்காப்பியத்தில் பாதீடு என்று வெட்சித் திணையில் வருகிறது. அதன் பொருள் பங்கிட்டுக் கொள்ளுதல் என்பதாகும். அதாவது புறத்திணையியலில் ஆநிரைகளை தாம் பகிர்ந்து கொண்டதோடு பிறருக்கும் வழங்குவதை மரபாகக் கொண்டிருந்தார்கள் என்கிற ஆரம்ப கால நிலையும் இங்கு

நோக்கதக்கது. வறுமையான நிலையிலும் செம்மையாக அவற்றிலும் பிறருக்கு உதவிவாழும் நல்வாழ்வினை மேற்கொண்ட வேட்டுவர்களாக வாழ்ந்ததை காணமுடிகிறது.

**மக்கட்பெயர்**

வேட்டுவவரியில் மக்கள் பெயருள் வேடர்களுக்கு மறவர், எயினர், எயிற்றியர். வேடர், கானவர், தொல்குடி என்னும் பெயர்களை இளங்கோவடிகள் சுட்டிக் காட்டியுள்ளார். இப்பெயர்கள் சங்க இலக்கியத்தில் ஒவ்வொரு நிலம் சார்ந்து சுட்டப்பெறும் பெயர்களாக இருக்கின்றன. அதனால் சிலப்பதிகாரம் சங்க காலத்தில் எழுந்தனவா, அப்போது உள்ள நிகழ்வா அல்லது முந்தைய நிகழ்வா அல்லது இந்த செய்திகள் மக்களிடத்தில் பயன்பாட்டிற்கு வந்ததில் காலதாமதம் ஏற்பட்டதா போன்ற வகையில் ஐயப்பாடும் இருக்கின்றது.

"வழங்குவில் தடக்கை மறக்குடி" (வே. வ. 6)

"கானவர் ... (வே.வ.9. கொடை 7) "வல்வில் எயினர்" (வே. வ. 13) அம்பு எய்யும் பாலை நில வேட்டுவரை எயினர் என அழைக்கப்பட்டது. எயினர் என்பதும் இனபெயரன்று. "எயிற்றியர்... (வே. வ - 20.) "விற்தொழில் வேடர்" (வே. வ - 4)

என்ற பாடல் வரிகளின் வழியாக வேடர்களின் பல பெயர்கள் வெளிப்படுகின்றன. வேட்டுவ வரியில் இளங்கோவடிகள் மரபுப்பெயர்களை ஆங்காங்கே சுட்டிக்காட்டுகிறார். இப்பெயர்களை தொழில் செய்பவர் என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளதே அன்றி, இனத்தை அவர் குறிக்கவில்லை. அதிலும் குறிப்பாக, வேட்டுவர் குலப் பெண்ணை கொங்க செல்வி என கூறுகிறது.

**தெய்வமேறலும் தெய்வ வழிபாடும்**

முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து

நல்லியல்பு அழிந்து நடுங்குதுயர் உறுத்துப்

பாலை என்பதோர் படிவம் கொள்ளும்'' (சில.காடுகாண். 64 — 66)

என்ற சிலப்பதிகார மேற்கோளின் அடிப்படையில் முல்லையும் குறிஞ்சியும் பாலையாகும். குறிஞ்சிக்கும் முல்லைக்கும் வழிபடு தெய்வமாகிய கொற்றவை, பின்னர் பாலைக்கும் கொற்றவை என்ற மரபு நிலை பெற்றது. வேட்டுவர்களிடையை இயற்கை மற்றும் மூதாதையினரையும் வழிபடும் பழக்கம் இருந்தது. ஆனாலும் வேட்டுவர்களின் இனக்குழு சமுதாயத்தில் கடவுள் வழிபாடாக கொற்றவை வழிபாடு இருந்துள்ளது இது பழைய வழிபாடாகும். சிலப்பதிகாரத்தில் காணப்படும் கொற்றவை வழிபாடு பழைய வழிபாட்டின் எச்சம் ஆகும். ஆறலைத்துண்ணும்

தம் தொழில் வளம் பெருக தங்கள் குல தெய்வமாகிய கொற்றவையே வணங்கும் பழக்கம் உடையவர்களாக இருந்தனர். கொற்றவைக்கு பலி கொடுக்காத நிலையில் தங்களுக்கு பயன் கிடைக்காது என நம்பினர். (வே. வ 11 - 17) இந்த வரிகள் வேட்டுவர்களின் நம்பிக்கையை எடுத்துக்காட்டுகிறது.

ஐயை கோட்டத்தில் எயினர்கள் தங்கள் தலைகளைத் தாங்களே அறுத்து பலிபீடத்தில் வைத்தார்கள். இதனை,

இட்டுத்தலை எண்ணும் எயினர் அல்லது

சுட்டுத் தலைபோகாத் தொல்குடி குமரியை "(சி .வே. வ. 20 -21)

"மிடறு உகு குருதி கொள் விறல் தரு விலையே

நிணன் உகு குருதி கொள் நிகர் அடு விலையே " ( சி. வே. வ. 17-18)

வேட்டைச் சமூகத்தில் உயிர்பலி என்பது, ஒன்று வாழ மற்றொன்றைக் கொல்லுதல் எனும் செயலின் அடிப்படையில் அமைந்துள்ளது. கொற்றவை தந்த வெற்றியின் விலையாகத் தன்னையே பலி கொடுக்கும் தன்மை எயினர்களிடம் காணமுடிகிறது. இளங்கோவடிகள் கலையமர் செல்வி, அணங்கு, கொற்றவை, அமரி, குமரி,கவுரி, சூலி, நீலி, ஐயை, திங்கள் வாழ்சடையாள், திருவமாற் கிளையாள் முதலான பெயர்களில் கொற்றவையைக் குறிப்பிடுகிறார். வேட்டுவ வரியில் வரும் செல்வி, ஐயை, அணங்கு முதலான பெயர்கள் பழந்தமிழர்களின் குறிஞ்சி, முல்லை நிலச் சமூகத்தின் தாய்தெய்வமே இக்கொற்றவை என்பதனை அறிய முடிகிறது.

ஐயை கோட்டம் என்பது கொற்றவைக்கான கோவில். அங்கு வேட்டுவ முதுமக்களுக்கு கொற்றவை கோலமிட்டு,

’’வண்ணமும் சுண்ணமும் தண்ணறுஞ்

சாந்தமும் புழுக்கலும் நோலையும்

விழுக்குடை மடையும் பூவும் புகையும்

மேவிய விரையும் படைத்து பறை

முழங்க கொம்பு முழங்க வணங்குவர்’’ (கொற். கோ.17—22) வரிகளின் வாயிலாக அறியலாம். கோட்டங்களில் தெய்வக் கோலத்தை மானிடர்க்குப் புனைந்து வழிபடும் வழக்கமும வரிப்பாடல்கள் பாடிக் கரவைக்கூத்து ஆடும் வழக்கமும் தெய்வமேறி ஆடும் நடைமுறைநும் இருந்தன.

எயினர் குடியிருப்பில் இடம்பெறும் ஐயை கோட்டத்து வழிபாட்டில் சாலினி தெய்வமேறி ஆடுகிறாள். (சிலப். வே, 4 -74) அச்சமயம் எயினர் வேட்டுவ வரிப் பாடல்கள் பாடி ஆடினர். இதன் மூலமாக அக்கால சமயம் என்பது வழிபடுவோரையும் வழிபடு பொருட்களையும் அடிப்படையாகக் கொண்டு தொடர்வதாகவே அமைந்துள்ளது. எயினர்கள் தங்கள் குல தெய்வமாக கொற்றவையை வணங்கினார்கள். எனவேதான் வேட்டுவ வரியில் வெட்சி மலரை சூடி போர் வீரர்கள் ஆநிரைகளை கவரச் செல்லும்போது, கொற்றவைக் கோலத்தோடு சாலினியும் உடன் செல்வாள். அப்போது காரி என்னும் பறவை அப்போது சகுனம் செல்லும் என்றும் கூறியிருப்பதால் அது உறுதியாகிறது.

## முடிவுரை

சிலப்பதிகாரத்தின் சிறு பகுதியாக வேட்டுவ வரி இருந்தாலும் ஐந்நில மக்களுள் ஒரு மரபுசார் மக்கள் வாழ்வை தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. வேளான் மக்களாய் பரிணாமம் பெறும் முன்னர் வேட்டை மனிதனாய் இருந்தான். ஆனால் சிலம்பில் காட்டும் வேடர்கள் வேட்டையாடுதல் மட்டுமன்றி வழிப்பறி செய்த செயலையும் குறிப்பிடுகிறார். இனக்குழு சமுதாய வாழ்வின் பண்புகளில் தலையானது பொதுவில் வைத்து உண்ணுகின்ற முறை என குறிப்பிட முடியும். இன்றும் இவ்வுயரிய பண்பான கூடி உழைத்தல், பங்கிட்டுக் கொள்ளுதல், பிறருக்கும் வழங்குதல் என்னும் பண்பு இச்சமூக மக்களிடத்தில் அன்று முதல் இன்று வரை பண்பாடக இருக்கிறது. இருந்தாலும் தொடக்க காலத்தில் வேட்டைத் தொழிலும் வறுமையும் இருந்தாலும் செம்மையான வாழ்க்கை வாழ்ந்தவர்கள் பிற்காலத்தில் கொலை, கொள்ளை என மாற்றிக்கொண்டனர் என்பதும் உண்மையாகும். இதற்கு மூல காரணம் பொருளாதார எற்றத்தாழ்வு இவர்களின் வாழ்விலும் பெரும்மாற்றத்தினை ஏற்படுத்துயது என்றே கூறலாம். ஆநிரை கவர்தல் போரில் எயினர்க்கு வெற்றி தருபவள் கொற்றவை என்ற குறிப்பு வேட்டுவ வரியின் மையப்பொருளாகும். வெற்றி பெற்றதும் கொற்றவைக்கு விழா எடுப்பர். அவ்விழாவில் தங்கள் இனத்தைச் சேர்ந்த சாலினி என்ற பெண்ணைக் கொற்றவையாக மாற்றி வழிபடுகின்றனர். இவ்வழிபாடு இனக்குழுச் சமுதாயத்தினரிடம் உள்ள தாய் தெய்வ வழிப்பாட்டை நினைவுபடுத்துவதாகவே அமைந்துள்ளது. மற்றும் போதிய அளவு விழிப்புணர்வு இல்லாததால் தங்களின் தலையைத் தங்களே அறுத்து கொற்றவைக்குப் பலி கொடுப்பதனால் தங்கள் இனத்தைத் தாங்களே அழித்துக் கொண்டவர்கள் என்பதை சிலப்பதிகாரத்தின் வழி அறியமுடிகிறது.

**துணைநூற் பட்டியல்**


1. கைலாசபதி, க., பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும், குமரன் ப்பளிசர்ஸ், சென்னை 1999

2. சிறீ சந்திரன், ஜெ., சிலப்பதிகாரம் மூலமும் தெளிவுரையும், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை — 2001

3. புலியூர்க்கேசிகன், சிலப்பதிகாரம், பாரி நிலையம், சென்னை — 1958.

4. மாதையன், எம்., சங்க கால இனக்குழு சமுதாயமும் அலசு உருவாக்கமும், பாவை பதிப்பகம், சென்னை.

5. சுப்பிரமணியன், என்., சங்க கால வாழ்வியல், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.


## *References*


*1. Kailasapathy, K., Ancient Tamil Life and Worship, Kumaran Pulitzers, Chennai 1999*

*2. Sri Chandran, J., Silappadhikaram Moolam Chhayaraiyum, Varthamanan Publishing House, Chennai — 2001*

*3. Puliyurkesikan, Silappadhikaram, Pari Nilayam, Chennai — 1958.*

*4. Madhayan, M., Sangam Era Ethnic Group Society and Formation of Alash, Pavai Publishing House, Chennai.*

*5. Subramanian, N., Sangam Era Life, New Century Book House, Chennai*

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்


## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

வரும் 2026, ஜனவரி மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - ஜனவரி 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜூலை இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com